# வீரத் தமிழன் ஸ்டாலின் ஜகதீஸ்.

## தாயார் சகோதரர் பேட்டி.

### உண்ணாவிரதத்தை நிறுத்த வேண்டுகோள்.

### வீரத்தியாகி மறுப்பு.

### தினந்தோறும் தாய்மார்கள் தரிசனம்.

### இரக்க, அன்பு, மதிப்புக் கண்ணீர் சொரிதல்.

—:o:—

### வீரன் உடல் நிலை தளர்ச்சி.

### மயக்கமும் களைப்பும் மிகுதி.

### எந்நிமிஷத்திலும் ஆபத்து!

## அநுதாபத்தந்திக் குவியல்

## பார்ப்போரெல்லாம் பரதவிப்பு!

### இன்று (9-6-38) 40ம் நாள் உண்ணாநோன்பு.

(ஒரு நிருபர்)

தியாகராயநகர், ஜூன் 9.

உடல்நிலை கீழ் நோக்கிச் செல்கிறது. கையும், காலும் சில்லென்று குளிர்ந்து இருக்கின்றன. நேற்று (8-6-38) காலை ஸ்டாலின் அவர்களுடைய தாயாரும் சகோதரரும் மற்ற உறவினரும் வந்து பார்த்து மனம் வருந்தினார்கள். ஸ்டாலின், அவர்களுக்குத் தகுந்த சமாதானம் சொல்லி வருத்தப்படாமலிருக்கும்படி கேட்டுக்கொண்டார். ஏராளமான தாய்மார்களும் ஸ்திரீகளும் வந்து பார்த்து வருத்தத்துடனும் கவலையுடனும் சென்றார்கள். நேற்று இரவு முழுவதும் தூக்கமில்லாததோடு மயக்கமும் பலமாக இருந்தது. ஆனால் அவர் ஒருவருக்கும் சொல்லாமலேயிருந்து விட்டார். விடியற்காலை 4 மணிக்குப் பிறகு தான் அந்த மயக்கம் தெளிந்தது. வெளியூர்களிலிருந்து தோழர்களும் தலைவர்களும் பெரிய மனிதர்களும் தந்திகளும் கடிதங்களும் அனுப்பிக்கொண்டேயிருக்கிறார்கள். வேலூர், திருவாரூர், காஞ்சிபுரம், திருநெல்வேலி, திருச்சி, சேலம் முதலிய இடங்களிலிருந்து ஜனங்கள் திரள் திரளாய் அவரைப் பார்க்க வந்து போகிறார்கள். அவரது உடல் நிலையைக் கருதி எல்லோரையும் அவரைப் பார்க்க அனுமதிக்கப்படுகிறதில்லை. அவருடைய உடல்நிலை நாளுக்கு நாள் கவலையையுண்டாக்குகிறது. அவருடைய தாயாருக்குத் தேர்தல் சொல்ல அவர் பலமாகப் பிரயாசைப்பட்டார். ஆனால் ஹிந்தி ஒழிகிறவரையில் உண்ணாவிரதத்தை நிறுத்த முடியாதென்று உறுதியாகத்தெரிவித்து விட்டார். ஆனாலும், எப்போதும் சந்தோஷமாகவும் ஊக்கமாகவும் இருக்கிறார். எப்போதும் சிரித்தபடியே யிருக்கிறார். இளைப்பும் களைப்பும் நாளுக்குநாள் அதிகப்பட்டுக் கொண்டேயிருந்தும் கூட்டங்களுக்குச் சென்று சாய்வு நாற்காலியில் அமர்ந்து இருக்கிறார். இந்த நிலையில் கூட்டங்களுக்குச் செல்லக்கூடாதென்று தடுத்தும், கூட்டங்களுக்குப் போக வேண்டும் என்பது தான் தமது பேரவா என்றும் அதைத் தடுக்கக்கூடாதென்றும் சொல்லி பிடிவாதம் செய்கிறார். தினந்தோறும் கூட்டங்களுக்குத் தவறாமல் சென்று வருகிறார். அவரது ஊக்கத்தையும் உறுதியையும் கண்டு யர்வரும் ஆச்சரியப்படுகிறார்கள். கூட்டங்களில் ஸ்திரீகள் அதிகமாகக் கலந்துகொள்வதோடு அவரைப் பார்ப்பதற்காகவே அதிகம்பேர் ஸ்திரீகள் முக்கியமாகத் தாய்மார்கள் வருகிறார்கள்.

**ஸ்டாலின் ஜெகதீசன்**
**உண்ணாவிரதம்**
**இன்றைக்கு**
**41-ம் நாள்.**